சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–14.09.2020

## <u>அவசரக்கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் ஆவணி மாதம் 29–ஆம் நாள் ( செப்டம்பர் திங்கள் 14–ஆம் நாள்:– 14.09.2020) திங்கள் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இணைப்புகள், குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் இயற்கை பேரிடரால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2020–2021–இன்கீழ் சாலைகள் மேம்பாட்டுப் பணிக்கு ரூ.5.00 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மேற்படி மதிப்பீடுகளுக்கு இந்நகர்மன்றத்தின் 08.06.2020–ஆம் நாளிட்ட 38–ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு, விரிவான திட்ட மதிப்பீடுகளுக்கு முழுமானயமாக நிர்வாக அனுமதி வழங்க வேண்டி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி அரசாணை (D) எண்.303, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, நாள்.09.09.2020–இல் 2020–2021–ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.500.00 இலட்சம் என்றும், கணித்து ஒப்புதல் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.475.00 இலட்சம் என்றும், மேற்படி ரூ.475.00 இலட்சத்தினை கீழ்க்கண்டவாறு 3 சிப்பங்களாக மேற்கொள்ளவும், அதில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் பங்கு (IUDM 2020–21) ரூ.380.00 இலட்சம் என்றும் (ரூ.190.00 (152.00) ரூ.145.00 (116.00), ரூ.140.00 (112.00) = ரூ.475.00 இலட்சம் (ரூ.380.00 இலட்சம்)) எஞ்சிய 20% தொகை முறையே மூன்று சிப்பங்களுக்கு (ரூ.38.00இலட்சம், ரூ.29.00 இலட்சம், ரூ.28.00 இலட்சம்) ஆக மொத்தம் ரூ.95.00 இலட்சம் நகராட்சியின் பங்குத் தொகை என உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்டங்கள் அனுமதித்தல் மற்றும் அறிவுரைத்தல் குழுவினரால் (Project Sanctioning and Monitoring Committee) 28.07.2020ம் அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பளிக்கப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No | Name of the Work | Length Km | Est. Cost (Rs.in Lakh) |
|---|---|---|---|
| 1 | Improvement of BT Surface at Ezhil Nagar, Head works road, Annamalai Nagar Cross Street, Palaya Palayam Cross Street, Lakshmi Nagar, Ayyanarpuram Cross Streets, Compost Yard road, Pallikottaipatti Cross Street, High School Road, Water Tank Road, Min Nagar Cross Street, Sivasakthi Nagar Main roads, Sivasakthi Nagar Cross Street, Alagarsamy Nagar Cross Street in Chinnamanur Municipality (Ward No.24,27,17 and 26) | BT Road - 4455m | 190.00 |
| 2 | Improvement of BT surface at Keelapulananthapuram Main road, Keelapulananthapuram Cross Street, Kannammal Garden road, Pon Nagar Main roads, Pon Nagar Cross Street, Colony School North Street, Samykulam Main road, Samykulam Main road (MCC) in Chinnamanur Municipality. (Ward No.1,2 and 3) | BT Road-3038m | 145.00 |
| 3 | Improvement of BT Surface at Gandhi Nagar Colony 6th Street, Gandhi Nagar Colony 8th Street (Ravi House), Gandhi Nagar Colony 5th Street, Gandhi Nagar Colony 4th Street, Kaliamman Koil Cross Street, Gandhi Nagar Colony 8th Cross Streets, Gandhi Nagar Colony (Vettai Karuppasamy Koil Near), Gandhi Nagar Colony 7th Street (Sheela Store), VOC 1st Street, Pattalamman Koil Street, Santhai Pudur Streets, Seepalaikottai Cross Street, Daily Market Road and Ulavarsanthai Road in Chinnamanur Municipality. (Ward No.4,5, 17 and 19) | BT Road-3043m | 140.00 |
| | **Total** | | **475.00** |

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.475.00 இலட்சத்தில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மான்யத் தொகை ரூ.380.00 இலட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ.95.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிலிந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1654/2020/இ1)

தீர்மான எண், நாள் 101, நாள்.14.09.2020
தீர்மானம்

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN60S6634–க்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.7057/2014/இ2)

தீர்மான எண், நாள் 102, நாள்.14.09.2020
தீர்மானம்

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் தேனி அவர்களின் உத்திரவின்படி நகராட்சி முக்கிய சாலைகளில் 4 முதல் 5 இடங்களில் ஒலி பெருக்கி மூலம் கொரோனா தொற்று தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நகராட்சி பகுதியில் அவ்வப்போது கொரோனா தொற்று தொடர்பாக விழிப்புணர்வு ஒலி பெருக்கி விளம்பரம் மற்றும் கொரோனா தொற்று தொடர்பாக நடைபெறும் மருத்துவ முகாம் குறித்து அறிவிப்பு விளம்பரம் போன்றவை மேற்கொள்ள ஆகுமூ உத்தேச செலவினம் ரூ.100000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)

தீர்மான எண், நாள் 103, நாள்.14.09.2020
தீர்மானம்

*******

பொருள் எண்.4

சின்னமனூர் நகராட்சி முக்கிய சாலை பகுதிகளில் கொரோனா தொற்று தொடர்பான விழிப்புணர்வு விளம்பரம் மேற்கொள்ள 10.09.2020—ஆம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | விவரம் | நாள் ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1. | முத்துரேடியோஸ், சீப்பாலக்கோட்டை ரோடு, சின்னமனூர். | குழாய்—2<br>ஸ்பீக்கர்—1<br>மைக்—1 | ரூ.1500/— |
| 2. | அன்புமணி ரேடியோஸ், அரசு மருத்துவமனை எதிரில், சின்னமனூர் | குழாய்—2<br>ஸ்பீக்கர்—1<br>மைக்—1 | ரூ.1300/— |
| 3. | தங்கம் ஆடியோ&லைட் ஹவுஸ், அண்ணா நகர், சின்னமனூர் | குழாய்—2<br>ஸ்பீக்கர்—1<br>மைக்—1 | ரூ.1000/— |

**அலுவலகக் குறிப்பு:—** **மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த தங்கம் ஆடியோஸ்&லைட் ஹவுஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0454/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **104, நாள்.14.09.2020**

**தீர்மானம்**

*******

பொருள் எண்.5

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படியும் மற்றும் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் தொடர்பு அலுவலர் மற்றும் மருத்துவ குழுவினரின் ஆலோசனைகளின்படி 20 தற்காலிக சுய உதவிக் குழுவினர் மூலம் நகராட்சி பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டு விவரம் தெரிவிக்க அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி கள ஆய்விற்கு தேவையான Finger Tip Pulse Oxymeter BPL 4 எண்ணம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.11000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2392/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **105, நாள்.14.09.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக சுய உதவிக் குழுவினர் மூலமாக கொரோனா தொற்று தொடர்பான களப்பணி மேற்கொள்ள தேவையான Finger Tippulse Oxy Meter BPL 4 எண்ணம் வாங்கும் பணிக்கு 10.09.2020–ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ESARES SRS Diagnostic, Theni | 1 No | Rs.2500/– |
| 2. | SRI Medi Tech, Madurai | 1 No | Rs.2620/– |
| 3. | Surya Traders, Theni | 1 No | Rs.2580/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த ESARES SRS Diagnostic, Theni என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2392/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **106, நாள்.14.09.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN60S2193க்கு (Jet Rodding) FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூபாய்.175000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6437/2018/இ2)**

**தீர்மான எண், நாள்** **107, நாள்.14.09.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.8

இந்நகராட்சியின் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மின் மோட்டார்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண் 624. நாள்.08–03–2019 ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து. மேற்படி பணியை செய்வதற்கு 21-07-2020ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**1) குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ள 30 HPMotor சரி செய்யும் பணி ( 1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. K.வனராஜ்.சின்னமனுார் | ரூ.25350/– |
| 2. | திரு. R.பரமானந்தன்,பரமத்தேவன்பட்டி | ரூ.25830/– |

**2) குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 40 HPMotor சரி செய்யும் பணி (1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. K.வனராஜ்.சின்னமனுார் | ரூ.11600/– |
| 2. | திரு. R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.11810/– |

**3) குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ள 30 HPMotor சரி செய்யும் பணி ( 1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. K.வனராஜ்.சின்னமனுார் | ரூ.32500/– |
| 2. | திரு. R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.32950/– |

**4) குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ள 5 HPMotor சரி செய்யும் பணி ( 1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. K.வனராஜ்.சின்னமனுார் | ரூ.6000/– |
| 2. | திரு. R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.6100/– |

**5) சிறு மின் விசை பம்பு 2 HPMotor சரி செய்யும் பணி ( 2எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. K.வனராஜ்.சின்னமனுார் | ரூ.4400/– |
| 2. | திரு. R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.4600/– |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் காணும் திரு. K.வனராஜ், சின்னமனுார், அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு. K.வனராஜ், ஒப்பந்ததாரார் சின்னமனுார். அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6130/2016/இ2).

**தீர்மான எண், நாள்** 108, நாள்.14.09.2020

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சியின் எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, ஒத்தவீடு, பசும்பொன் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.20 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2750/2020/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **109, நாள்.14.09.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் (வார்டு எண்.1 மற்றும் 27 தவிர) சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பாதாள சாக்கடைத் திட்ட பைப்லைன்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்யும் பணி ஜெட்ராடிங் இயந்திரம் மூலம் அவ்வப்போது சரி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் குறுகிய தெருக்களில் ஜெட்ராடிங் இயந்திரம் சென்று வர இயலவில்லை. எனவே குறுகிய தெருக்களில் பாதாள சாக்கடை திட்ட அடைப்புகளை சரி செய்யும் பணியினை பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மேற்கொள்ள புதியதாக சிறிய அளவிலான மொபைல் ஜெட் பெட்ரோல் என்ஜின் டிரைவன் மெஷின் ஒரு எண்ணம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்காணும் செலவினத்தை பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1227/2020/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **110, நாள்.14.09.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் வண்டி எண்.TN60S2751க்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.21000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்காணும் செலவினத்தை வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2).** |
| **தீர்மான எண், நாள்** | **111, நாள்.14.09.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகன எண்.TN60AW6753–க்கு ஆயில் சர்வீஸ் உள்ளிட்ட சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு கடந்த 16.03.2020–ஆம் நாள் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s NRI Automobiles Solution, Theni – Rs.19927/-
2. M/s Theni Tinker,Welding, Ark and Car Spray Painting works, Theni – Rs.21380/-
3. M/s Fathima Car Care, Theni - Rs.20988/–

**அலுவலகக் குறிப்பு:–**

1. மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் கண்டுள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0661/2020/எச்1).
2. அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி மேற்கண் பணி மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள்** **112 , நாள்.14.09.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகன எண்.TN60S3761க்கு (குடிநீர் லாரி) 2019–2020–ஆம் ஆண்டுக்கான தகுதி சான்று (FC) முடிவடைவதால், 2020–2021–ஆம் ஆண்டுக்கு தகுதிச் சான்று (FC) புதுப்பிக்கும் பொருட்டு, சில மராமத்துப் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.42000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0324/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **113 , நாள்.14.09.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

பொருள் எண்.14

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் நகராட்சியில் நடைபெற்ற வளர்ச்சி திட்டப்பணிகளை மாலை மலர் நாளிதழின் சார்பில் விநாயகர் சதுர்த்தியினை முன்னிட்டு தொழில் மலர்–2020–இல் பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.17500/– M/s Malar Publications Private Limited அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் **06.08.2020**ம் தேதிய ந.க.**80**/செ.ம.தொ.அ/**2020** எண்ணிட்ட கடிதத்தின்படி மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.**0248/2019**/இ**1**)

**தீர்மான எண், நாள்** **114 , நாள்.14.09.2020**

**தீர்மானம்**

*******

பொருள் எண்.15

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகன எண்.TN60S9443 என்ற காம்பாக்டர் வாகனத்திற்கு **2020–2021** ஆம் ஆண்டிற்கு புதுப்பித்தல் பணி மேற்கொள்ளும் பொருட்டு மேற்கண்ட வாகனத்தில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**150000**/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.**2528/2020**/எச்**1**)

**தீர்மான எண், நாள்** **115 , நாள்.14.09.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******

பொருள் எண்.16

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள Tube Light மற்றும் Ceiling Fan ஆகியவை பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பணியாளர்களின் நலன் கருதி புதிதாக Tube Light மற்றும் Ceiling Fan-கள் வாங்க **13.05.2020**ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – ரூ.**19938**/–
2. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – ரூ.**20356**/–

அலுவலகக் குறிப்பு:– **மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1298/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **116 , நாள்.14.09.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

*******